Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆடி 12 திங்கட்கிழமை (28-07-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 234

## சக்தி வாய்ந்த 2 கண்ணி வெடிகள் படையினர் கைப்பற்றினர்

மட்டக்களப்பு, ஜூலை 28

மட்டக்களப்பு — வாழைச்சேனை வீதியில் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் தலா 30 கிலோ எடையுள்ள இரு கண்ணி வெடிகளைப் படையினர் கைப்பற்றினர்.

பின்னர் அவை செயல் இழக்கச் செய்யப்பட்டன.

மட்டக்களப்பு — பொலன்னறுவை வீதியில் செல்லும் இராணுவ வாகன அணியை இலக்காக வைத்தே இவை வைக்கப்பட்டிருந்தன எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

வீதிச்சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட படையினரே இவற்றை கைப்பற்றினர் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-3-21)

## வன்னி ராணுவ நடவடிக்கையில் அடுத்த சில தினங்களில் திருப்பம்

### றொஹான் தளுவத்த தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 28

''வடபகுதியில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடத்தப்படும் 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கை திட்டமிட்டபடியும், வெற்றிகரமாகவும் மேற்கொள்ளப்படுகிறது அடுத்த சில தினங்களில் இந்த இராணுவ நடவடிக்கையில் முக்கிய திருப்பம் ஏற்படும்.''

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றொஹான் தளுவத்த 'லங்காபுவத்' துக்கு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறிப்பிட்ட இலக்கை நோக்கி 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கைத் துருப்பினர் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

இராணுவத்தினரின் முன்நோக்கிய ஒவ்வொரு செயற்பாடும் உச்சக்கட்ட திட்டமிடலின் பின்னரே மேற்கொள்ளப்படுகிறது

தீர்மானிக்கப்பட்ட இலக்குகள் அனைத்தும் எட்டப்படும்.

பாதுகாப்புப் படையினரின் முன்னேற்றம் திருப்திகரமானதாகும்.

வடதிசை நோக்கி இராணு

(8 ஆம் பக்கம் பார்க்க)

# 'குட்வில்' பயணிகள் கப்பல் சேவையில் ஈடுபட மாட்டாது!

## அது தகுதி அற்றதென அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 28

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் பயணிகளை ஏற்றி இறக்குவதற்காக வாடகைக்கு அமர்த்தப்பட்ட 'குட்வில் கைட்' கப்பல் சேவையில் ஈடுபட மாட்டாது. அக்கப்பல் பயணிகள் சேவைக்குத் தகுதியற்றது என்று அக்கப்பலைப் பரிசோதித்த அதிகாரிகள் குழு முடிவு செய்து நேற்று அறிக்கையும் சமர்ப்பித்துள்ளது.

திருகோணமலை துறைமுக அதிகாரி உட்பட அறுவர் அடங்கிய குழு நேற்று இக்கப்பலுக்குள் சென்று கப்பலின் நிலைமையை நேரில் அவதானித்த பின்னர் பயணிகள் சேவைக்கு இந்தக் கப்பல் தகுதி அற்றது என்று முடிவு செய்து திருமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் எஸ். வேலும் மயிலுவுக்கு அறிக்கை சமர்ப்பித்தது.

இந்த அறிக்கையை கொழும்பில் உள்ள வடமாகாண மீள் குடியமர்வு புனர் வாழ்வு அதிகார சபைக்கும், இந்தக் கப்பலை அனுப்பிய கம்பனிக்கும் வேலும் மயிலும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் சுற்றிவளைப்பு

கொழும்பு, ஜூலை 28

திருகோணமலை பஸ் நிலையம், சின்னக்கடைப் பகுதி ஆகியவை நேற்று அதிகாலை 5.00 மணி முதல் சுற்றி வளைக்கப்பட்டுத் தேடுதல் இடம்பெற்றது.

சுமார் 3 ஆயிரம் பேர் பஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

இவர்களில் 12பேர் தடுத்து வைக்கப்பட்டு மேல்விசாரணை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

(இ-3-164)

## காணாமற்போன கப்பல் விவகாரம்; சிம்பாப்வே அதிகாரி இங்கு வருகிறார்

### மர்மம் துலங்கலாம் என்று ஊகம்

கொழும்பு, ஜூலை 28

இலங்கைக்கு ஷெல்களை ஏற்றி வந்த சமயம் காணாமற்போனதாகக் கூறப்படும் கப்பல் குறித்து ஆராய சிம்பாப்வே அரசின் பாதுகாப்பு அமைச்சு உயர் அதிகாரி ஒருவர் இவ்வாரம் கொழும்பு வருகிறார்.

இலங்கை அரசாங்கம் வழங்கிய கொள்வனவுக்கான உத்தரவின்படி அக்கப்பலில் ஏற்றப்பட்ட பொருள்களின் ஆவணங்களுடன் இவர் கொழும்புக்கு வருகிறார்.

இவரின் இலங்கை விஜயம் மூலம் கப்பலின் மர்மம் துலங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சிம்பாப்வேயில் இருந்து மோட்டார் ஷெல்கள் கொள்கலன்களில் தரைமார்க்கமாக மொசாம்பிக் நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டு, அங்குள்ள ''பேறா'' என்ற ஏரியில் வைத்து கப்பலில் ஏற்றப்பட்டதாகவும் —

அங்கிருந்து புறப்பட்ட கப்பல் மடகஸ்கர் துறைமுகத்துக்கு சென்றது என்றும் —

அதன் பின்பே கப்பல் காணாமற்போயுள்ளதாகவும் — தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

காணாமல் போன கப்பலை மீட்க இலங்கை அரசாங்கம் இராஜதந்திர மட்டத்திலும் முயற்சிகள் மேற்கொண்டுள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழர் பிரச்சினையை ஆராய சூரிச் மாநாடு

### இன்று முதல் புதன் வரையும்

சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரில் ஈழத்தமிழர் பிரச்சினை பற்றி ஆராய இன்று முதல் 30 ஆம் திகதி வரை மாநாடு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சர்வதேச விழிப்பு அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த மாநாட்டில் இலங்கையில் இருந்து சரித்த ரதிவத்த, இரா. சம்பந்தன், பேர்னாட் திஸைரத்தின, நந்தாகொட, பிரட்மன் வீரக்கோன் ஆகியோரும் —

வெளிநாட்டில் உள்ள தமிழர் அமைப்புக்கள் சார்பில் கே. வின்சன்ற், வி. உருத்திரகுமார், அம்பலவாணர், வண. பிதா இம்மானுவல் ஆகியோரும் —

இந்தியாவில் இருந்து ஜே. என். டிக்ஷிற், ராம், கே. ஆர். நாராயணன் ஆகியோரும் — பங்குபற்றுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதே நேரம் — விடுதலைப் புலிகளின் சர்வதேச அலுவலகத்தைச் சேர்ந்த அன்ரன் ராஜா இம் மாநாட்டில் பங்கு பற்றலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

(இ-3-164-173)

## முச்சந்தி முரளி



கப்பல் விவகாரத்தி[illegible] இருக்குது பாருங்கோ...!

## விமான சேவை மீண்டும் நாளை ஆரம்பிக்கலாம்

கொழும்பு, ஜூலை 28

கடந்த 14 ஆம் திகதி இடைநிறுத்தப்பட்ட கொழும்பு – யாழ்ப்பாணம் பயணிகள் தனியார் விமான சேவை நாளை செவ்வாய்க்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்படலாம் என்று விமான சேவையை நடத்தும் மூவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 24 ஆம் திகதி முதல் விமான சேவை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு டிக்கெட் பெற்றவர்களை அழைத்துச் செல்ல வசதியாக நாளை முதல் மூன்று நாள்களுக்கு தினமும் 4 தடவைகள் சேவை நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

விமானச் சேவை தொடர்பாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்துக்கு நேற்று மாலை வரை தகவல் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## காங்கிரஸ் தேசிய மாநாட்டுக்கு இலங்கையிலிருந்து ஐவர் அழைப்பு

கொழும்பு, ஜூலை 28

கல்கத்தாவில் எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறவிருக்கும் இந்திய காங்கிரஸ் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு இலங்கையில் இருந்து ஐந்து அரசியல் தலைவர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, இ.தொ.கா. தலைவர் எஸ். தொண்டமான், தமிழர் விடுதலைக் கூட்டணி மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோருக்கே அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தென் ஆபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா, பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர், பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹஸீனா பாகிஸ்தான் முன்னைய பிரதமர் பெனாஸிர் பூட்டோ ஆகியோருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதலுக்கு புலிகள் திட்டம்

கொழும்பு, ஜூலை 28

விடுதலைப் புலிகள் மட்டக்களப்பு நகரில் தொடர்ச்சியாக தாக்குதல்களை நடத்துவதற்கு திட்டமிட்டு வருகிறார்கள் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்.பிக்களுக்கு பாதுகாப்பு சபாநாயகர் நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 28 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு அளிக்க புதிய திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த சபாநாயகர் கே.பி. ரத்நாயக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு அளிக்க நியமிக்கப்படும் மெய்ப்பாதுகாவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்படவிருக்கிறது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிரதேசத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் அந்தப் பிரதேச நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக்கு பொறுப்பாக இருப்பர்.

இது தொடர்பான புதிய திட்டம் குறித்து சபாநாயகர் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பவிருக்கிறார்.

(இ-3-150)

# முஸ்லிம்களுக்கு தனி அலகு தேவை இல்லை

## முஸ்லிம் கட்சி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 28

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம்களுக்கு தென் கிழக்கு என்று அலகு தேவையில்லை. தற்போதுள்ளது போன்று வடக்கு - கிழக்கு இணைந்து இருந்தால் போதுமானது.

முஸ்லிம் காங்கிரஸில் இருந்து பிரிந்து சென்று உருவாக்கப்பட்ட முஸ்லிம் கட்சி மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளது.

இந்த விடயமாக இக்கட்சிப் பிரமுகர்கள் ரெலோ, ஈ. பி. டி. பி, தமிழ்க் காங்கிரஸ் ஆகியவற்றுடன் பேச்சு நடத்தியுள்ளனர்.

ரெலோவும், தமிழ்க் காங்கிரஸும் இக்கட்சியின் நிலைப்பாட்டை வரவேற்றுள்ளன என்று அந்தக் கட்சிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

(இ-3-150)


## தீவக கமலா வைத்தியசாலை

பூநாறி மரத்தடி, இல. 651, கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வைத்தியசாலையின் கிளை ஸ்தாபனம், சகல நவீன வசதிகளுடன் பன்றிக் கோட்டுப் பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக, இல. 424, கே. கே. எஸ். வீதியில் அமைக்கப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அன்புடன் அறியத் தருகின்றேன்.

Dr. எஸ். கணேஸ்

(48628)


# சர்வதேச நாடுகளின் நடவடிக்கை எமக்கு அழுத்தம் தரும் செயல்

## பௌத்த அமைப்புகளின் சம்மேளனம் கண்டனம்

கொழும்பு, ஜூலை 28

"அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் யோசனைகளை ஏற்றால் இலங்கைக்குத் தாராளமாக உதவுவோம் என்று சர்வதேச நாடுகள் கூறிவருவது எம் மீது அழுத்தம் தரும் செயல். எமது நாட்டின் இறைமைக்கு பாதிப்பு ஏற்படுத்தும் இந்த வகையான அறிவித்தல்கள் எம்மைப் பணியவைக்காது"

பௌத்த அமைப்புக்களின் சம்மேளனம் மேற்கண்டவாறு கண்டனம் தெரிவித்துள்ளது:

"அரசு முன்வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் யோசனைகளை ஏற்பது அல்லது விடுவது எமது விருப்பம். இந்த விடயத்தில் சர்வதேச நாடுகள் எம் மீது அழுத்தம் எதையும் பிரயோகிக்க முடியாது. தாராளமாக உதவுவோம் என்று அந்த நாடுகள் கூறி எம்மைப் பணியவைக்க முடியாது'' என்று மேலும் அந்த அமைப்பு தெரிவித்தது.

## ஆசிரியர்நியமனம்

அடுத்த கட்ட ஆசிரியர் நியமனம் 1996 ஆம் ஆண்டு பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் நடைபெற்ற போட்டிப் பரீட்சைகளின் பெறுபேறுகளின்படி புள்ளி அடிப்படையிலே வழங்கப்படும் என்று அரச சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக்குழு அறிவித்துள்ளது

(இ-4)

## ஜிம்னாஸ்டிக் கண்காட்சி

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டுச் சபையின் ஜிம்னாஸ்டிக் கழக ஏற்பாட்டில் ஜிம்னாஸ்டிக் கண்காட்சி ஒன்று எதிர்வரும் 31 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவிருக்கிறது.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகவும், விளையாட்டு ஆலோசனைக் குழுத் தலைவரும், முகாமைத்துவத் துறைத் தலைவருமான எம். நடராஜசுந்தரம் சிறப்பு விருந்தினராகவும் பங்குபற்றுவர். (இ-3)

## பொன் விழா வைபவம்

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் பொன் விழா நிறைவு நிகழ்ச்சிகளின் இரண்டாம் நாள் விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணி முதல் உரும்பிராய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் அதிபர் ஆ. சி. நடராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ)

## நிதி உதவி கிடைக்கும்

கொழும்பு, ஜூலை 28

இலங்கைக்கு பல்வேறு துறைகளில் மனிதாபிமான உதவிகளையும் அபிவிருத்தி முயற்சிகளுக்கான ஆதரவையும் வழங்கிவரும் ஐரோப்பிய யூனியன் எதிர்காலத்தில் யாழ். குடாநாட்டு புனரமைப்புப்பணிகளுக்கும் நிதி வசதிகளை வழங்கும் என இலங்கைக்கான ஐரோப்பிய யூனியன் பிரதிநிதியும் தூதுவருமான ஏச். ஏ. இல்கா யுவாசிலோ தெரிவித்துள்ளார். (ஐ-4)

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை - கதிரவேலு

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கதிரவேலு அவர்கள் 26 - 7 - 97 சனிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும், இராசமலர், இரட்ணராஜா [லிபியா], பாக்கியநாதன் [SMA] [லிபியா] ஆகியோரின் அன்புத்தந்தையும், இரத்தினம், இராசலட்சுமி, சாரதாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற ஐயாத்துரை, அப்புத்துரை, வேவி, சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்வமலர், றஞ்சிதமலர், இந்திரகுமார், இதயகுமார், செல்வகுமார், துஷியந்தி, சுகந்தன்; சுகிர்தரன், மனோகரன், றஜினி, தவேந்திரன், அஷ்வினி, தர்சிகா, சுதர்சிகா, ஹரிசுகிர்தன், ஹரிசுதன் ஆகியோரின் அன்புப் பேரனும் சசிந்தன், மதன்ராஜ், சிவதாஸ், பிரசாந் ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27. 7. 97 ஞாயிற்றுக்கிழமை [நேற்று] நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்;
திருமதி இ. இராசலட்சுமி.
(மருமகள்)

330, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி.

(48624)

## கிருஸ்ண ஐயர் சுபபிரமணிய ஐயர்

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கிருஸ்ண ஐயர் சுப்பிரமணிய ஐயர் 26-07-97இல் காலமானார்.

அன்னார் சரஸ்வதியம்மாவின் அன்புக் கணவரும், திருமதி சிவசுப்பிரமணிய சர்மா, ஜெகதீஸ்வரி, கெங்கேஸ்வர சர்மா, வைத்தீஸ்வரக் குருக்கள் (வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம குரு), கேதீஸ்வர சர்மா, திருமதி நிராஞ்சனன் வாலாம்பாள் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவசுப்பிரமணிய சர்மா (அடைக்கலம் தோட்டம் கந்தசாமி கோயில்), பாலேஸ்வரி, ஹம்சவல்லி, சுபாசினி, நிராஞ்சனன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்,

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 28-07-97 வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் கந்தசாமியார் கோயிலுக்கு அருகாமையிலுள்ள இல்லத்தில் காலை 9 மணிக்கு நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
சு. வைத்தீஸ்வரக் குருக்கள்
(கண்ணன்)

அடைக்கலம் தோட்டம்,
வட்டுக்கோட்டை.

(48623)


## விற்பனைக்குண்டு

SONY T. V. 20" வீடியோடெக், வீடியோ படக் கொப்பிகள் (பழைய, புதிய படங்கள்), 100 பழைய போஸ்டர்கள், 100 சிறிய கட்டவுட்கள், வீடியோ லென்ஸ், மினிக்குரிய வாங்குகள்.

தொடர்புகளுக்கு:-

**றீயல் வீடியோ**
உடுப்பிட்டி றோட், வித்தனியடி,
வல்வெட்டித்துறை.

(சி/1212)

## THE SALVATION ARMY

கைதடி இரட்சணிய சேனையில் 04-08-97 இல் புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

★ தையல் ★ பூவேலை ★ ஐசிங்
★ தலையலங்காரம் ★ தட்டெழுத்து
★ சுருக்கெழுத்து ★ ஆங்கிலம் ★ சிங்களம்

தொடர்பு:
நிர்வாகி, இரட்சணியசேனை, கைதடி.

சாவகச்சேரியிலும் எமது ஸ்தாபனத்தினால் புதிய வகுப்புக்கள் 04-08-97 இல் ஆரம்பமாகின்றன.

★ தையல் ★ ஆங்கிலம் ★ சிங்களம்

தொடர்பு:
திருமதி D. T. கிருபைரத்தினம் (ஆசிரியை)
'ஜோயிலின்'
தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

(48627)

உ



"மணியே மணியி னொளியே யொளிரு மணிபுனைந்த
அணியே யணியு மணிக்கழ கேயணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே"



இன்று 28-07-1997 நண்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்

**யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய**

தேவி மஹோற்சவத்தை முன்னிட்டு இப்பதிகம் பிரசுரிக்கப்படுகின்றது.

539, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (48606)

கனகசபை தர்மகுலசிங்கம்,
"பழமுதிர்ச்சோலை", காரைநகர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஷ்மீர் தீவிரவாதிகளுடன் நிபந்தனையின்றிப் பேச்சு!

## பிரதமர் குஜ்ரால் அழைப்பு



ஸ்ரீநகர், ஜுலை 28

காஷ்மீரில் தனிநாடு கோரிப் போராடி வரும் தீவிரவாதிகளுடன் நிபந்தனைகள் எதுவும் இன்றி பேச்சு நடத்த இந்தியப் பிரதமர் இந்தர் குமார் குஜ்ரால் முன்வந்துள்ளார்.

பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முனவருமாறு காஷ்மீர் பள்ளத்தாக்கில் வைத்து அவர் தீவிரவாதிகளுக்கு அழைப்பு விடுத்தார்.

கடந்த எட்டு ஆண்டு காலப்பகுதியில் காஷ்மீர் மாநில முஸ்லிம் தீவிரவாதிகளுடன் நிபந்தனைகள் எதுவுமின்றிப் பேச்சு நடத்த இந்தியப் பிரதமர் ஒருவர் முன்வந்திருப்பது இதுவே முதல் முறையாகும்.

காஷ்மீர் மாநிலத்துக்கு விஜயம் செய்த பிரதமர் குஜ்ரால் சுமார் 2 ஆயிரத்து 500 கோடி ரூபா செலவிலான பாரிய ரயில் பாதைத் திட்டத்தை நேற்று முன்தினம் அடிக்கல் நட்டு ஆரம்பித்து வைத்தார். அதன் பின்னர் அங்கு இடம்பெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் அவர் உரையாற்றினார். நிபந்தனைகள் எதுவுமின்றிப் பேச்சு நடத்த முன்வருமாறு அப்போது அவர் தீவிரவாதிகளுக்கு அழைப்பு விடுத்தார். அத்துடன் இந்தியாவின் கட்டுப் பாட்டின் கீழ்உள்ள காஷ்மீர் பகுதிகளுக்குள் ஊடுருவல்கள் செய்வதை நிறுத்துமாறு பாகிஸ்தான் அரசிடம் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

இந்திய அரசுக்கும் காஷ்மீர் தீவிரவாதிகளுக்கும் இடையே அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பாக இதுவரை முறைப்படியான பேச்சு வார்த்தைகள் எதுவும் நடைபெற்றதில்லை. இந்நிலையில் பிரதமர் குஜ்ராலின் இந்த அழைப்பு பரவலான கவனத்தை ஈர்த்துள்ளது. ஆனால் பேச்சுவார்த்தை விடயங்களைக் குறித்து பிரதமர் குஜ்ரால் எவ்வித கருத்தும் வெளியிடவில்லை.

காஷ்மீரின் பிரதான பிரிவினை வாத அரசியல் கட்சியான 'அனைத்துக்கட்சி 'ஹொரியத் மாநாட்டுக்கட்சி' பிரதமரின் அறிவிப்புக் குறித்தும் அவரது வார்த்தைப் பிரயோகங்கள் குறித்தும் ஆராயப் போவதாகத் தெரிவித்துள்ளது.

காஷ்மீர் நிலப்பரப்பு தனி நாடக்கப்பட வேண்டும் என்றும், அது பாகிஸ்தானுடன் இணைக்கப்பட வேண்டும் என்றும், முஸ்லிம் தீவிரவாதிகள் தெரிவித்து வந்ததால் இந்திய அரசுடனான சமாதானப் பேச்சு என்பது சாத்தியமான ஒருவிடயமாகக் கடந்த காலப் பகுதியில் கருதப்படவில்லை — என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## ம. தி. மு. கவும் ஆர்ப்பாட்டம் செய்யும்

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து தாக்கப்படுவதைக் கண்டித்து ஜனதாக் கட்சி இன்று திங்கட்கிழமை சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகம் முன் நடத்தும் ஆர்ப்பாட்டத்துக்கு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகமும் ஆதரவு தெரிவித்திருக்கிறது.

இக்கட்சியின் பொதுச்செயலாளர் வை. கோபாலசாமி நேற்று சென்னையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

[இ-4]

## காபூல் மீது மீண்டும் தாக்குதல்

தலிபான் எதிர்ப்புப் படையினர் ஆப்கான் தலைநகர் காபூல் மீது மீண்டும் ரொக்கெற் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

காபூல் விமான தளத்தின் அயலில் மூன்று ரொக்கெற்றுக்கள் வீழ்ந்து வெடித்ததாகவும் சேதவிவரங்கள் தெரியவில்லை என்றும் செய்திகள் தெரிவித்தன.

காபூல் நகரில் இருந்து 30 கிலோ மீற்றர் தொலைவில் எதிரணிப் படைகள் நிலை கொண்டுள்ளன.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவும், வெளிநாட்டுத் தொண்டு நிறுவனங்களும் காபூலுக்கான விமானப் பயணங்களை நிறுத்தியுள்ளன.

## மக்கள் கூட்டத்தின் மீது வீழ்ந்துசிதறியவிமானம்!

### சாகசக் காட்சியின் போது சம்பவம்

ஒஸ்ரண்டே, ஜுலை 28

பெல்ஜியத்தில் ஒஸ்ரண்டே நகரில் விமான சாகசக் காட்சியின் போது இடம்பெற்ற விபத்தில் பார்வையாளர்கள் 8 பேர் பலியாகினர்; சுமார் 55 பேர் காயமடைந்தனர். காயமடைந்தோரில் 10 பேர் மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளனர்.

விமானங்களின் சாகசக் காட்சியைக் கண்டு களிப்பதற்காகத் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தின் மீது சாகச விமானம் ஒன்று விழுந்து வெடித்துச் சிதறியதாகக் கூறப்படுகிறது.

ஜோர்தான் நாட்டைச் சேர்ந்த "எக்ஸ். ரீ. 300' ரக விமானம் ஒன்றே இவ்வாறு விழுந்து விபத்துக்குள்ளானது.

பார்வையாளர்கள் கூட்டத்தின் மீது விமானம் வீழ்ந்து நொருங்கிய காட்சியை அங்கு கூடியிருந்த சுமார் 10 ஆயிரம் பேர் நேரில் பார்த்து அதிர்ச்சியுற்றனர்.

(ஐ)

## லாலுவின் தேசிய ஜனதாதளுக்கு ஐக்கிய முன்னணியில் இடம் இல்லை

### 3 அமைச்சர்கள் குறித்து குஜ்ரால் முடிவு செய்வார்

புதுடில்லி, ஜுலை 28

இந்தியாவில் ஆளும் ஐக்கிய முன்னணியில் லாலு பிரசாத் யாதவின் தலைமையிலான தேசிய ஜனதா தள் கட்சியைச் சேர்ப்பதில்லை என ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உலக அரங்கில்

கடந்த வெள்ளி இரவு பிரதமர் குஜ்ராலின் இல்லத்தில் 3 மணி நேரம் நடைபெற்ற கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது என முன்னணியின் செய்தித் தொடர்பாளர் ஜெயபால் ரெட்டி தெரிவித்தார்.

மத்திய அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் மூன்று தேசிய ஜனதா தள் உறுப்பினர்கள் அமைச்சரவையில் தொடர்ந்து அங்கம் வகிப்பதா இல்லையா என்பது குறித்துத் தீர்மானிக்கும் பொறுப்பை பிரதமரிடமே விட்டுவிடுவது எனக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

(இ-10)

## எண்ணெய்கலப்பு

ஜேர்மனியின் வடபகுதியில் வெள்ளப் பெருக்கை அடுத்து வெடித்துச் சிதறிய எண்ணெய்க் கொள்கலன்களில் இருந்து பல ஆயிரக்கணக்கான லீற்றர் எண்ணெய் வெள்ளத்துடன் கலந்துள்ளது.

## மனைவியை முதலமைச்சராக்கிய லாலுவின் செயல் கேலிக் கூத்து

### ஜனதா தலைவர் அத்வானி கருத்து

புதுடில்லி, ஜுலை 28

பீஹாரில் லாலுபிரசாத் யாதவ் தமது மனைவியை முதலமைச்சராக நியமித்திருப்பது ஜனநாயகத்தைக் கேலிக் கூத்தாக்கியுள்ளது எனவும் ஊழலை மூடிமறைப்பதற்காகவே இந்த நியமனம் செய்யப்பட்டுள்ளது என்றும் பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் எல். கே. அத்வானி கண்டித்துள்ளார்.

இந்த ஆண்டு இறுதியில் அல்லது அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் இந்தியாவில் பொதுத் தேர்தல் நடக்கலாம் என தனது கட்சியின் 2 நாள் கூட்டத்தின் பின் எல். கே. அத்வானி செய்தியாளரிடம் தெரிவித்தார்.

## இடைக்கால அறிக்கை அடுத்தமாதம்

புதுடில்லி, ஜுலை 28

ராஜீவ்காந்தி படு கொலை தொடர்பாக விசாரணை நடத்திவரும் ஜெயின் ஆணைக்குழு அதன் இடைக்கால அறிக்கையை அடுத்த மாத நடுப்பகுதியில் மத்திய அரசிடம்சமர்ப்பிக்கவுள்ளது.

2 ஆயிரம் பக்கங்களைக் கொண்ட இந்த இடைக்கால அறிக்கையில் 1981 முதல் 91 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இந்தியாவில் போராளிகளின் பின்னணி மற்றும் ராஜீவ் கொலை செய்யப்பட்ட சமயம் வரையான அவரது பாதுகாப்பு போன்ற விவரங்கள் அடங்கியிருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜெயின் ஆணைக்குழு இதுவரை முன்னாள் பிரதமர்கள் சந்திரசேகர், பி. வி. நரசிம்மராவ் மற்றும் முன்னாள் பிரதம தேர்தல் ஆணையாளர் [illegible] குமார் [illegible] விசாரித்துள்ளது.

(ஐ)

## தெற்கு பிரான்ஸில் பெரும் காட்டுத் தீ!

### மிக வேகமாகப் பரவுகிறது!!

பாரிஸ், ஜுலை 28

பிரான்ஸ் நாட்டின் தென்பகுதி நகரான மாஸேலிக்கு அருகே உள்ள காட்டுப்பகுதியில் பெரும் காட்டுத் தீ பரவியுள்ளது.

கடந்த வெள்ளியன்று பரவிய இத்தீயைக் கட்டுப் படுத்த முடியாமல் தீயணைப்புப் பிரிவினர் திண்டாடிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. சுமார் ஆயிரத்து 500 தீயணைப்புப் படையினர் இரவு பகலாகத் தீயை அணைக்க போராடி வருகின்றனர்.

மணிக்கு இரண்டரைக் கிலோ மீற்றர் வேகத்தில் தீ காடுகளில் பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடும் காற்று வீசி வருவதால் தீயை அணைக்கும் பணி பாதிக்கப்பட்டுள்ளது.

ஒன்பது விமானங்களும் பல ஹெலிக்கொப்ரர் களும் தீயை அணைப்பதில் தீயணைப்பு படையினருக்கு உதவி வருகின்றன.

(ஐ)

## "நாஸா"வே வெளியேறு:

## செவ்வாய்க் கிரகம் எமக்கே சொந்தம்!

### இரு யேமனியர் விநோத வழக்கு

சனா, ஜுலை 28

செவ்வாய்க் கிரகத்தின் நிலப் பரப்பு தமது பூர்வீக சொத்து என்று யேமன் நாட்டைச் சேர்ந்த இருவர் உரிமை கோரியுள்ளனர்.

செவ்வாய்த் தரையில் தற்சமயம் ஆய்வு மேற்கொண்டுள்ள "நாஸா" விண்வெளி ஆராய்ச்சி நிலையம் தனது நடவடிக்கையை நிறுத்தி விட வேண்டும் என்று கோரி அவர்கள் வழக்குத் தொடுத்துள்ளனர். ஆனால் அந்த இரு நபர்களையும் கைது செய்யப் போவதாக யேமன் சட்ட மா அதிபர் எச்சரித்ததை அடுத்து அவர்கள் தங்கள் வழக்கை கடந்த வியாழனன்று வாபஸ் பெற்றனர்.

முஸ்தபா ஹாலிவ், அப்துல்லா அல் அமீர் ஆகிய இருவருமே இவ்வாறு செவ்வாய்க் கிரகத்துக்குச் சொந்தம் கொண்டாடுவதாக யேமனின் 'அல் தாவ்ரா' வாரப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

தங்களுக்குச் சொந்தமான செவ்வாய்க் கிரகத்தில் 'நாஸா' விஞ்ஞானிகள் தங்கள் அனுமதி இன்றி விண்கலத்தை இறக்கியது குற்றம் என்றும் இதற்காக யேமனில் உள்ள அமெரிக்கத் தூதர் டேவிற் நியூட்டனை நீதிமன்றத்துக்கு கொண்டுவருமாறும். இவர்கள் இருவரும் வாதிடுவதாக அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்ட யேமன்சட்ட மா அதிபர் மொஹமட் அல்படி "அவர்கள் இருவரும் சித்தப்பிரமை பிடித்தவர்கள்" எனத் தெரிவித்தார்.

"பிரபலமும், பெருமையும் தேடிக்கொள்வதற்கான முயற்சியே இது" என்றும் அவர் கூறினார்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரடங்கினால் ஆஸ்பத்திரி செல்லவில்லை

# இரவு வேளை வீட்டிலேயே பிரசவம்; இரத்தப் போக்கினால் தாய் மரணம்!

யாழ்ப்பணம், ஜுலை 28 குடாநாட்டில் அமுலில் உள்ள இரவு ஊரடங்கு காரணமாகவும், இரவில் வாகனங்களைச் செலுத்த வாகன உரிமையாளர்கள் பின்னடிப்பதாலும் அவசர நோயாளர்களை ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்வது பெரும் சிரமமாகி விட்டது. இதனால் வீண் உயிரிழப்புகள் ஏற்பட்டு வருகின்றன. குறிப்பாக கர்ப்பிணிப் பெண்கள் பெரும் ஆபத்தை எதிர்நோக்குகின்றனர்.

போக்குவரத்து வசதி கிடைக்காததரல் கைதடி கிழக்கைச் சேர்ந்த கனகரட்ணம் சத்தீஸ்வரி (வயது 36) என்ற பெண் பிரசவத்தின் போது மரணமானார்.

கடந்த வெள்ளி இரவு பிரசவ வேதனையால் துடித்த பிரஸ்தாப பெண்ணை ஊரடங்கு காரணமாக ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்படவே அவர் வீட்டிலேயே குழந்தையைப் பிரசவித்தார்.

இரவு முழுவதும் கடும் இரத்தப் போக்கு ஏற்பட்டதை அடுத்து அதிகாலை வேளை அப்பெண்ணை ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்ற சமயம் வழியில் அவர் உயிரிழந்தார்.

பின்னர் அவரது சடலம் யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டது. மரண விசாரணையின் பின் உறவினர்களிடம் சடலம் ஒப்படைக்கப்பட்டது.

(ஐ-15)

## வங்கிகளில் போலி நகைகளை அடகுவைத்துபணம்பெறும்மோசடி

போலி நகைகளை வங்கிகளில் அடகு வைத்து பணம் சேகரிக்கும் மோசடி ஒன்றை கொஸ்வத்தை பொலீஸார் கண்டு பிடித்தனர்.

இது சம்பந்தமாக 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்று மோசடி தடுப்பு பொலீஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இந்த நபர்கள் 64 பவுண் போலி நகைகளை அடகு வைத்து 3 லட்சத்துக்கும் அதிகமான தொகையைப் பெற்றது தெரியவந்துள்ளது.

நகைகளை அடகு வைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட அடையாள அட்டைகளும் போலியானவை என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கம்பஹா, கடுவல, இிரிபதிகொட, கிரியுள்ள, கொஸ்வத்த, தங்கொட்டுவ ஆகிய பகுதிகளில் உள்ள பலவங்கிக் கிளைகளில் இந்தப் போலி நகைகள் அடகுவைக்கப்பட்டுள்ளன.

பித்தளையினால் செய்யப்பட்ட நகைகளுக்கு தங்க முலாம் பூசப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

(இ-4)

## பளைப் பகுதி விவசாயிகளுக்கு மண்எண்ணெய் விநியோகம்

தென்மராட்சி, ஜுலை 28 பளைப்பகுதி விவசாயிகளுக்கான மண் எண்ணெய் பளை ப.நோ.கூ. சங்க எரிபொருள் நிலையத்தில் வழங்கப்பட்டு வருகிறது, விவசாயிகள் தத்தமது பகுதி கிராம அலுவலரின் சிபாரிசுடன் மண்எண்ணெய் பெற்றுக் கொள்ளலாமெனவும்,

இப்பகுதி குடியிருப்பாளர்களுக்கு தற்போது பங்கீட்டு அட்டைக்கு இரண்டு லீற்றர் வீதம் வழங்கப்பட்டு வரும் மண் எண்ணெய் அடுத்த வாரம் முதல் மூன்று லீற்றர் வீதம் வழங்கப்படுமெனவும், அத்துடன் பங்கீட்டு அட்டைக்கு மூன்று கிலோ முதல் பத்துக்கிலோவரை மா வழங்கப்படுவதாகவும் சங்கத் தலைவர் சி. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

(ஐ-117)

## வடமராட்சி கிழக்கில் கூ. சங்கக்கிளை

வடமராட்சி கிழக்கு மக்களின் நன்மை கருதி வல்லிபுரக்கோயில் காவல் அரண் பகுதிக்கு அருகில் கூட்டுறவுச் சங்கக்கிளை ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

(ஐ-36)

## கிளாலியில் மீண்டும் கூ. சங்க கிளை

பளை பலநோக்குக் கூட்டுறவுச். சங்கத்தின் கிளாலிக் கிளைக்கடை கிளாலி — புலோப்பளை வீதியில் உள்ள தனியார் வீடொன்றில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முன்னர் இங்கிருந்த கிளைக்கட்டடம் இராணுவ நடவடிக்கையின் போது உடைக்கப்பட்டு பொருள்கள் சூறையாடப்பட்டதனால் மூடப்பட்டது.

அண்மைக் காலமாக இப்பகுதி மக்கள் மீளக்குடியேறியதை அடுத்து 523 படைபணித் தளபதியின் வேண்டுகோளின் பிரகாரம் இக் கிளை தனியார் வீடொன்றில் இயங்கத் தொடங்கியதாக சங்கத் தலைவர் சி. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

(ஐ-117)

## மீனவர் தங்கு மண்டபம் காக்கைதீவில் அமைப்பு

சண்டிலிப்பாய், ஜுலை28

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் நிதி உதவித் திட்டத்தின் கீழ் காக்கைதீவில் மீனவர்களுக்கான தங்குமண்டபம், விற்பனை நிலையம் என்பன அமைக்கப்பட்டு வருகின்றன. சுமார் ஐந்து இலட்சம் ரூபா செலவில் இவை இரண்டும் நிறுவப்பட்டு வருவதாக வலி. தென் மேற்கு பிரதேச செயலர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

(ஐ-135)

## எழுதுநர் பரீட்சையில் சித்தியடைந்தோர் விவரம்

அரசாங்க பொது எழுதுநர் சேவையின் 2 ஆம் வகுப்பு 'ஆ' பிரிவுக்குப் பதவி உயர்வு பெறுவதற்காக கடந்த 95 ஆம் ஆண்டு நடைபெற்ற பரீட்சையில் 17 பேர் சித்தியடைந்துள்ளனர். இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் விரைவில் அனுப்பி வைக்கப்படும் என்று யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் அறிவித்துள்ளார்.

சித்தியடைந்தோரின் பெயர் விவரங்கள் வருமாறு:-

★ எஸ். உமாகாந்தன் — கரவெட்டி கிழக்கு.

★ செல்வி ஜி. மதிவதனி — தொட்டிலடி, சங்கானை.

★ செல்வி எஸ். அருளானந்தம் — ''மணிவளவம்'' பித்தறி கோயிலடி.

★ ஆர். என். சுகந்தராஜ் — அளுத்தாய், அளவெட்டி.

★ செல்வி என். பூரணசந்திரா — கட்டவாய்க்குளம், சுன்னாகம்.

★ செல்வி ஜி. மங்கையர்க்கரசி — வி. எம் றோட், பருத்தித்துறை,

★ செல்வி ஜே. சந்திரவதனா — 'மகதாரகி' தெல்லிப்பழை.

★ செல்வி ஜி. சுகந்தி — உடுவில் கிழக்கு.

★ செல்வி எஸ். பார்த்தீபன் — 32/4, விதானையார் வளவு, சுண்டுக்குளி.

★ எஸ். கலாதரன் — 134. கிராம விஸ்தரிப்புத் திட்டம், திருநெல்வேலி.

★ செல்வி என். நந்தினி — பிறவுண்றோட், யாழ்ப்பாணம்.

★ எஸ். சூரியகுமார்— செல்லத்துரை லேன், மல்லாகம்.

★ செல்வி கே. விஜிதா— கலட்டி அம்மன் றோட், யாழ்.

★ ரி, முகுந்தன்—புலோலி மேற்கு, பருத்தித்துறை.

★ செல்வி.என் சாரதா தேவி—ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.

★ எஸ். குகபாலன்— புலோலி மத்தி, புலோலி.

இத்துடன் எஸ். நடராஜா — (பிரதேச சபை, சாவகச்சேரி) என்பவர் நிர்வாக சேவையில் திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

(ஐ)


## பொய்யாமொழி ஜோதிடம்

### அதிர்ஷ்டம் அழைக்கிறது

எத்தகைய தீராத பிரச்சினைகளும் தீர ஆலோசனை வழங்கப்படும். வியாபாரம், விவாகம், தொழில் கல்வி, உயர்கல்வி போன்றவற்றில் உள்ள தடைகள் நீங்க விஷேடவழிகள் உண்டு. ஜாதகத்துடன் நேரில் வரவும்.

பலன் தவறினால் பணம் திரும்பப்பெறலாம். அதிர்ஷ்ட ஜாதகம் கணிக்கப்படும். ஜாதகம் எழுதத் தந்தவர்கள் இம்மாதம் முடிய முன் எடுக்கவும்.

**ஸ்ரீலஸ்ரீ. சு. சிவஷண்முகானந்தக்குருக்கள்**

ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயிலடி
140, பருத்தித்துறை வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம். (48625)



## நினைவூட்டுகின்றோம்

யாழ். மத்திய கல்லூரி
181 ஆவது நிறுவனர் நாள் விழா

**01 - 08 - 1997**
**(வெள்ளிக்கிழமை)**

★ தபால் தலை, முதல் நாள் உறை, 180 ஆவது ஆண்டு நிறைவு மலர் (கொழும்பு - பழைய மாணவர் சங்கக் கிளை) வெளியீடு

பிரதம விருந்தினர்:-
**பேராசிரியர் வ. நவரட்ணராஜா**

கௌரவவிருந்தினர்:-
**பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை**
துணைவேந்தர் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

வழங்கும்

**180 ஆவது நிறைவிழா நினைவுப் பேருரை:**
''இன்று மாறி வரும் சமூக - பொருளாதார நிலைக்கேற்ப கல்வி''

சிறப்பு விருந்தினர்:- **திரு. சு. இரத்தினராசா**
இலங்கை கல்வி நிர்வாக சேவை கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

மத்தியின் மைந்தர்கள், துணைவியர், எமது கல்லூரி ஆசிரியர்கள், துணை ஆளணியினர், மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தனி நபர் தாவர போசனத்திற்கு ரூபா 100 செலுத்தவும். மத்தியின் மைந்தர்களுக்கு இன்றைய சூழ்நிலையில் தனிப்பட்ட அழைப்பிதழ் அனுப்ப முடியாமைக்கு வருந்துகின்றோம். இதனை அழைப்பிதழாக ஏற்று பங்கு பற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், துணை ஆளணியினர்,
மாணவர்கள்.
யாழ். மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.

உப செயலாளர்,
யாழ். மத்திய கல்லூரி,
பழைய மாணவர் சங்கம். (சி-1209)


## இதய அஞ்சலி

| | |
|---|---|
| மலர்வு: 24-02-1969 | மலர்வு: 23-01-1969 |
| உதிர்வு: 28-07-1993 | உதிர்வு: 28-07-1993 |
| கப்டன் விஜி | தோழர் பகீரதன் |
| **ஐயம்பிள்ளை மதனசுரேந்திரன்** | **சண்முகநாதன் கண்ணதாசன்** |
| தெல்லிப்பழை. | கோப்பாய். |

எம் முயிர் தோழர்கள்! நீங்கள் நடந்த பாதைகளில்
கால் வெள்ளத்தில் அழியாச் சுவடுகள்!
எங்கள் கால்கள் சுவடுகள் தொடரும்
மக்கள் பணியில் என்றும் தொடரும்!
மரணமோ உங்களை வெற்றி கொள்ளும்
மரணத்தை வென்ற மனிதர்கள் நீங்கள்!
உதயம் வரைக்கும் தொடரும் பயணத்தில்
இதயத்தில் உங்களைப் பூசிக்கின்றோம்.

(சி-1207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்திச் சாரம்

### நல்லைக் குமரன் மலர் வெளியீடு

கொழும்புத்துறை, ஜுலை 28 நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தை ஒட்டி யாழ். மாநகர சபை சைவசமய விவகாரக் குழுவினரால் ஆண்டுதோறும் வெளியிடப்படும் ''நல்லைக் குமரன் மலர்'' இம்முறையும் வெளியிடப்படவுள்ளது.

இந்த மலரின் வெளியீட்டு விழா அடுத்த மாதம் 6 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

(ஐ-30)

### ஆஸ்திரிய தூதராக தமிழர்

கொழும்பு, ஜுலை 28 ஆஸ்திரியா நாட்டுக்கான இலங்கைத் தூதுவராக சி. எஸ். பூலோகசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆஸ்திரியாவில் தூதரகத்தைக் கொண்டு செயற்பட வுள்ள முதலாவது இலங்கைத் தூதுவர் இவராவார். இவர் வியன்னா நகரில் வாசஸ்தலத்தைக் கொண்டிருப்பார். (ஐ-10)

### மலகூடம் அமைப்பு

தென்மராட்சி. ஜுலை 28 சாவகச்சேரி நகரசபையின் தொழிலாளர் விடுதிப் பகுதியில் ரூபா 40 ஆயிரம் செலவில் மலகூடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இவ் வருட சபை நிதி ஒதுக்கீட்டில் இந்த மலகூடம் அமைக்கப்பட்டுள்ளதாக நகரசபை செயலாளர் சி. நடராசா தெரிவித்தார்.

(ஐ-117)

### பயிற்சி நெறி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜுலை 28 யாழ். மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவுக் கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மனைப்பொருளியல் அடிப்படைப் பயிற்சி நெறி ஆரம்ப வைபவம் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு புலோலி ப.நோ.கூ சங்க மேல்மாடிக் கட்டடத்தில் வடமராட்சி கூட்டுறவுச் சங்க ஒன்றியத் தலைவர் ச. செவ்வந்திநாதர் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ-15)

### வடிகால் சீரமைப்பு

குருநகர், ஜுலை 28 றெக்கிளமேசன் சனசமூக நிலையத்தின் முன்பாக சேதமடைந்த நிலையில் இருந்த வடிகால் மதகு யாழ். மாநகர சபை வேலைப்பகுதியினரால் அண்மையில் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. (ஐ-51)

### பயிற்சி நெறி ஆரம்ப வைபவம்

யாழ்ப்பாணம், ஜுலை 28 யாழ். மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவுக் கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் கீழான மனைப் பொருளியல் அடிப்படைப் பயிற்சி நெறி ஆரம்ப வைபவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு சங்கானை ப. நோ. கூ. சங்கத்திற்கு அருகில் உள்ள கட்டடத்தில் சங்கானை ப. நோ. கூ. சங்கத் தலைவர் க. திரவியம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ-15)

### விதைநெல் விநியோகம்

சண்டிலிப்பாய், ஜுலை 28 சண்டிலிப்பாய் மேற்கு, மத்தி விவசாய சம்மேளனப் பிரிவில் காலபோக நெல் விதைப்பில் ஈடுபட விரும்பும் விவசாயிகள் தமக்குத் தேவையான விதைநெல்லை பெறுவதற்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு முன்னர் சம்மேளனத்திற்கு விண்ணப்பித்து பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

### சேவை நலம் பாராட்டு விழா

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்ற அதிபர் க. லோகதாசனின் சேவை நலம் பாராட்டு விழா நாளை மறுதினம் முற்பகல் 9 மணிக்கு வித்தியாலய கலையகத்தில் ஆசிரியர் கழகத் தலைவர் சி. கதிரவேலு தலைமையில் நடைபெறவுள்ளது.

விழா ஆரம்பத்தில் விழா நாயகர் சிவபூதராயர் ஆலயத்தில் இருந்து தில்லையம்பதி சிவகாமி அம்மன் ஆலயம் ஊடாக ஊர்வலமாக அழைத்து வரப்படுவார்.

விழாவில் பாராட்டுரைகளும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (ஐ)

### விவசாய சம்மேளனங்கள் அமைப்பு

தென்மராட்சி, ஜுலை 28 சாவகச்சேரி கமநல சேவைகள் நிலைய எல்லைக்குட்பட்ட கொடிகாமம். வரணி இயற்றாலை ஆகிய பகுதிகளுக்கான விவசாய சம்மேளனங்கள் அண்மையில் பெரும்பாக உத்தியோகத்தர் செல்வி ஜெ. நவரத்தினத்தினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டன.

தெரிவு செய்யப்பட்ட விவசாயக்குழுக்கள் தத்தமது பகுதி விவசாயிகளின் விவரங்கள் பெற்று விவசாய உள்ளீடுகள், விதைநெல், மண்வெட்டி, உரவகைகள் ஆகியவற்றை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்வர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

### தவறணை தீக்கிரை

தென்மராட்சி, ஜுலை 28 பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் மாசார் கள்ளுத் தவறணை கடந்த வாரம் இனந் தெரியாதோரால் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது. தவறணைக்குள் இருந்த பெறுமதியான உபகரணங்கள் எரிந்து சாம்பராகின. (ஐ-117)

### தொடர்பு கொள்ள கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜுலை 28 அங்கத்துவக் கழகங்களுக்கு இடையிலான போட்டிகளை மீண்டும் நடத்துவதற்கு யாழ். உதைப்பந்தாட்ட லீக் ஏற்பாடுகளைச் செய்துவருகிறது.

அங்கத்துவ கழகங்கள் தமது பிரதி நிதிகள் ஊடாக ஈச்சமோட்டை வீதியில் உள்ள யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்க அலுவலகத்தில் விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### 5 கிலோ மா விநியோகம்

யாழ்ப்பாணம், ஜுலை 28 யாழ்ப்பாணம் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம் பங்கீட்டு அட்டைக்கு 5 கிலோ மாவும், 3 லீற்றர் மண்ணெண்ணெயும் கட்டுப்பாட்டு விலையில் பாவனையாளர்களுக்கு வழங்கிவருகிறது. (ஐ)

# சகல கிராம அலுவலர் பிரிவுகளிலும் இனி விவசாய சம்மேளனங்கள்

## இதுவரை 200 பிரிவுகளில் அமைப்பு

திருநெல்வேலி, ஜுலை 28 யாழ். மாவட்டத்திலுள்ள 435 கிராம சேவை அலுவலர் பிரிவுகளிலும் விவசாய சம்மேளனங்களை அமைப்பதற்கான முயற்சிகள் யாழ். கமநல சேவைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இதே வேளை இவ் வருடத்தில் அமைக்கப்பட்ட 200 விவசாய சம்மேளனங்களையும் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

விவசாய சம்மேளனங்கள் அமைக்கப்பட்ட பகுதிகளில் கிராம ரீதியாக விவசாயிகளுக்குத் தேவையான உள்ளீடுகளானபசளை, கிருமிநாசனி, விதைகள் மற்றும் விவசாய உபகரணங்கள் அவ்வப்பகுதி விவசாய சம்மேளனங்கள் ஊடாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இதுவரை விவசாய சம்மேளனங்கள் அமைக்கப்படாத பகுதிகளில் புதிதாக சம்மேளனங்களை அமைப்பதற்கு விவசாயிகள் முன்வர வேண்டும் என்று உதவி ஆணையாளர் சுந்தரேசன் தெரிவித்துள்ளார்.

(ஐ-135)

## கைதானோர், காணாமற்போனோரில் 22 பேரின் உறவினர்களை தொடர்பு கொள்ளக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜுலை 28 குடாநாட்டில் கைதானோர் மற்றும் காணாமற்போனோரில் 22 பேரின் பெற்றோர்கள், உறவினர்களை தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ் பிரதேச செயலர் து. வைத்திலிங்கம் கேட்டுள்ளார்.

முகவரி தெரியாத காரணத்தால் இவர்களுடன் தொடர்பு கொள்ள முடியாதுள்ளதாகவும், எனவே சம்பந்தப்பட்டோரை நேரில் வருகை தருமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதான, காணாமற்போன 22 பேரின் பெயர்கள் வருமாறு:-

- ★ துரை சதீஸ்.
- ★ பாக்கியநாதன் ஜுலியஸ்.
- ★ திருமதி. யோகராசா.
- ★ வேல்சாமி ராஜேந்திரன்.
- ★ நீகன் றொகான்.
- ★ எம். தேவராஜா.
- ★ அமிர்தநாதன் கிறிஸ்ரி ஜெயநாதன்,
- ★ திருவள்ளுவர் செல்லையன்.
- ★ சவரிமுத்து அன்ரன் ஜெயகுமார்.
- ★ வினாசித்தம்பி கோணேஸ்வரன்.
- ★ செல்வராசா ரகுநாதன்.
- ★ பற்குணசிங்கம் ராஜேந்திரன்.
- ★ செல்வநாயகம் தனபாலசிங்கம்.
- ★ ஆறுமுகம் மகேஸ்வரன்.
- ★ தயாபரன்.
- ★ என். தேவராணி.
- ★ பேனாட் ஜோசப் மோகன் அகிலன்.
- ★ ஆர். குகேந்திரன்.
- ★ பி. சிவகுமார்.
- ★ கே. தேவநேசன்.
- ★ என். உதயகுமார்.
- ★ மரியதாஸ் கியூரன்.

(ஐ)

### அதிபர்கள் கூட்டம்

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் தொகை மதிப்பீட்டுப் படிவங்களை நிரப்புவது தொடர்பாக அதிபர்களுக்கான கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மகாஜனக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஐ)

### பன்னிரு திருமுறைப் படிப்பு

சுழிபுரம், ஜுலை 28 சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி நடேசர் ஆலயம் முன்பாக தினமும் பிற்பகல் பன்னிரு திருமுறைப் படிப்பு நடைபெற்று வருகின்றது. பிற்பகல் 2.30 மணி முதல் 4.30 மணிவரை படிப்பு இடம் பெறுகின்றது. பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் இதில் கலந்து கொள்கின்றனர். (ஐ-28)

### மலசலகூடம் திருத்தப்படும்

சண்டிலிப்பாய், ஜுலை 27 மானிப்பாய் சந்தையிலுள்ள மலசல கூடம் சுமார் 40 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது. வலி.தென் மேற்கு பிரதேச செயலரினால் பிரமாண அடிப்படையிலான மூலதன நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட நிதியைக் கொண்டு பொது மக்களின் நலன் கருதி இம் மலசல கூடம் திருத்தியமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

### மினிவான் சேவை

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்றில் இருந்து மாமுனை ஊடாகச் சாவகச்சேரிக்கான மினிவான் சேவை கடந்த ஒரு மாத காலத்தின் பின் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

(ஐ-36)

# யுனெஸ்கோ இலக்கியப் போட்டி: சங்கானைக் கோட்ட முடிவுகள்

மானிப்பாய், ஜுலை 28 'யுனெஸ்கோ' நிறுவனத்தினால் சங்கானைக் கல்விக் கோட்ட பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட பேச்சு, கட்டுரை, கவிதைப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

**பேச்சுப்போட்டி**

**ஆரம்ப பிரிவு**

★ 1 ஆம் இடம் — செல்வி சி. சியாமளா (அராலி வள்ளியம்மை ஞாப. வித்தி.)

★ 2 ஆம் இடம் நா. சஜீபன் (வட்டு. கார்த்திகேய வித்தி.)

★ 3 ஆம் இடம் — செல்வி செ. வனஜா (வட்டு. கார்த்திகேய வித்தி.)

**கனிஷ்ட பிரிவு**

★ 1 ஆம் இடம் — செல்வி செ. சோதிமலர் (சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தி.)

★ 2 ஆம் இடம் — செல்வி இ. அபிராமி (பண்ணாகம் மெய்கண்டான் ம. வி.)

★ 3 ஆம் இடம் — செல்வி ச. சுகன்ஜா (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி)

**கனிஷ்ட இடைநிலைப் பிரிவு**

★ 1 ஆம் இடம் — செல்வி ந. கஜானா (யாழ்ப்பாணக் கல்லூரி)

★ 2 ஆம் இடம் சி. சிவகுமார் (வட்டு. திருஞான சம்பந்த வித்தி.)

★ 3 ஆம் இடம் — செல்வி பூ. கமலரூபி (வட்டு. இந்துக் கல்லூரி)

**மேற்பிரிவு**

★ 1 ஆம் இடம் — செல்வி ந. கலைச்செல்வி (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி)

★ 2 ஆம் இடம் — செல்வி செ. சிவரஞ்சினி (வட்டு. இந்துக் கல்லூரி)

**கட்டுரைப்போட்டி**

**1 ஆம் பிரிவு**

★ 1 ஆம் இடம் — செல்வி பு. தேவரஞ்சனா (சங்கானை சிவப்பிரகாச ம. வி.]

★ 2 ஆம் இடம் ச. சிவநந்தன் (சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தி.)

★ 3 ஆம் இடம் — இ. சரவணன் (யாழ்ப்பாணக் கல்லூரி)

**2ஆம் பிரிவு**

★ 1ஆம் இடம் — சி. சயந்தன் (யாழ்ப்பாணக் கல்லூரி)

★ 2ஆம்இடம் — க.சுகாஸ் (யாழ்ப்பாணக் கல்லூரி)

★ 3ஆம் இடம் — செல்வி சி. கயல்விழி (பண்ணாகம் மெய்கண்டான் ம. வி.)

**3ஆம் பிரிவு**

★ 1ஆம் இடம் — செல்வி த. தவலட்சுமி (சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தி)

★ 2ஆம் இடம் — செல்வி க. சயந்தினி (சங்கானை சிவப்பிரகாச ம. வி.)

★ 3ஆம் இடம் — செல்வி சி.இளவஞ்யா (பண்ணாகம் மெய்கண்டான் ம. வி.)

**4ஆம் பிரிவு**

★ 1ஆம் இடம் — க. பிரசன்னா (சங்கானை சிவப்பிரகாச ம. வி.)

★ 2ஆம் இடம் — செல்வி பி. யசோதரா (வட்டு. திருஞானசம்பந்த வித்தி.)

★ 3ஆம் இடம் — க. தவச்செல்வம் (வட்டு. இந்துக் கல்லூரி)

**5ஆம் பிரிவு**

★ 1ஆம் இடம்—ச. சசீவன் (யாழ்ப்பாணக் கல்லூரி)

★ 2ஆம் இடம் — செல்வி இ. ஜெயா (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி)

★ 3ஆம் இடம் — செல்வி கோ. தமிழினி (சங்கானை சிவப்பிரகாச ம. வி.)

**கவிதைப்போட்டி**

**4 ஆம் பிரிவு**

★ 1 ஆம் இடம் — நி. சுதானந்தன் (சங்கானை சிவப்பிரகாச ம. வி.)

★ 2 ஆம் இடம் — த. பிரபாகரன் (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி)

★ 3 ஆம் இடம் — செல்வி ச. சிவகாமி (வட்டு. இந்துக் கல்லூரி).

**5 ஆம் பிரிவு**

★ 1 ஆம் இடம் —அ. முருகதாஸ் (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி)

★ 2 ஆம் இடம் — செல்வி இ. தர்மினி (சங்கானை சிவப்பிரகாச ம. வி.)

★ 3 ஆம் இடம் — ம. சிவசிலன் (வட்டு. இந்துக் கல்லூரி.) (ஐ-90)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

பெண்கள் கைக்கடிகாரம் செயினுடன் நாச்சிமார் கோயிலில் இருந்து சாவகச்சேரிக்குச் செல்லும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கே. கே. எஸ். வீதியிலுள்ள நாச்சிமார் கோயில் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [48619]

கதிரவேலு கதிர்காமலிங்கம் என்பவரது 272382816V இலக்க தேசிய அடையாள அட்டை, ஆமிபாஸ் என்பனவற்றுடன் 23-7-97 அன்று யாழ்ப்பாணம் - கொழும்புத்துறைக்கிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 32, குமாரசாமி வீதி, கந்தர்மடம்/ 478, கொழும்புத்துறை வீதியில் ஒப்படைக்கவும் [48607]

முருகேசு – சொக்கலிங்கம் என்பவரது 905002007 இலக்க விசேட அடையாள அட்டை தட்டாதெருச்சந்திக்கும், யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ந. உருத்திரமூர்த்திக் குருக்கள், கந்தசுவாமி கோயில், இணுவிலில் ஒப்படைக்கவும் [48615]

## மணமகள் தேவை

ஜேர்மனியில் இருக்கும் 1963 ஆம் ஆண்டு பிறந்த கார்த்திகை நட்சத்திர மேடராசி கிரககுற்றமற்ற மணமகனுக்கு மணமகள் தேவை. விவரங்கட்கு கடித மூலம் தொடர்பு கொள்ளவும். க. கணேசராசா, மே/பா மணி ஐயா, அரசகேசரி விநாயகர் வடக்கு வீதி, நீர்வேலி. [48617]

## பிறீமா கோழி

7 மாதம் நிரம்பிய முட்டை இடும் லோமன்இன வெள்ளைக்கோழியும் 5½ மாதம் நிரம்பிய முட்டை இடும் கைலையின் சிவப்பு கோழியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கண்ணா வீடியோ சென்ரர், உடுவில், மான்ஸ் பாடசாலைவீதி, உடுவில், சுன்னாகம். [48606]

## தேவை

வேறு பொறுப்புக்களற்ற ஒரு பெண் உதவியாளர் தேவை. வயது 40—50 வீட்டு வேலைகளை அக்கறையுடன் கவனிப்பவராகவும், சுகதேகியாகவும் இருத்தல் வேண்டும். தொடர்பு: ஆ. கந்தசாமி, 15/2, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார் பண்ணை. [48620]

## நாடகம் எழுதுவது எப்படி?

என்று விளக்கிக் கூறுகின்ற முதலாவது தமிழ் நூல் ரூபா 50. அக்கரைச் சீமையில் இலங்கை - இங்கிலாந்து நாவல் ரூபா 25, அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதியவை. மாணவர்களுக்குப் பரிசளிப்பதற்கு ஏற்றவை. [48621]

## விவேகானந்தர் விழா

திருநெல்வேலி, ஜூலை 28

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி இந்துமா மன்றத்தின் ஆதரவில் சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டு விழா நிகழ்வு நாளை மறுதினம் புதன்கிழமை கல்லூரி அதிபர் ரி. சந்தோஷம் தலைமையில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் பருத்தித்துறை ஸ்ரீஇராமகிருஷ்ணசாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா ‘‘இலங்கையில் ஸ்ரீ இராமகிருஷ்ண இயக்கமும வைத்தீஸ்வராக் கல்லூரியும்’, என்ற விடயம் பற்றி உரையாற்றுவார். (ஐ-135)

---

மீண்டும் யாழ். நகரில்!

# ஜெயா அழகு மாடம்

**(JEYA FANCY)**

**127, கஸ்தூரியார் வீதி,**

**யாழ்ப்பாணம்**

என்ற முகவரியில் இயங்குகின்றது.

(48536)

---

## ஓராண்டு நினைவலைகள்



## சோமசுந்தரம் சுகந்தன்

**திதி: 28 - 07 - 1997**

மலர்வு: **09 — 03 — 1977**

உதிர்வு: **06 — 08 — 1996**

வாடாமல் உதிர்ந்த பூவே
என்றும் உன் நினைவுகளுடன்:

உற்றார், உறவினர், நண்பர்கள்.

நீத்துவான், கரவெட்டி. (48597)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் பொன்னையா சுப்பையா

(இளைப்பாறிய P. W. D. ஓவசியர்)

தோற்றம்: **18-08-1915**

மறைவு: **07-08-1996**

**திதி: 28 — 07 — 1997**

ஐயா! உங்கள் இறைபக்தி, தளராத முயற்சி, கனிவான பேச்சு, இரக்க சிந்தை, வள்ளற்றன்மை ஆகியவற்றால் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த நீங்கள் வானுறையும் தெய்வமாகிவிட்டீர்கள்; என்றும் எம்மை வழிநடத்துவீர்களாக.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், ஏனையோர்.

மாரீசன் கூடல்,
இளவாலை. (47345)

---

# மனித உரிமைகள் ஆணைக்குழு விரைவில் குடாநாட்டில் இயங்கும்

## அதன் செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 27

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ்ப்பாணத்தில் அதன் பணிகளை விரைவில் ஆரம்பிக்க இருப்பதாக ஆணைக்குழுவின் செயலாளர் கே. ஜயவத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு — 8 டாக்டர் என். எம். பெரேரா மாவத்தை, இல-50 இல் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையகம் இயங்குகிறது.

வடக்கு, கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் சகல பகுதிகளிலும் ஆணைக்குழுவின் கிளைகள் அமைக்கப்படவுள்ளன என்றும்—

பூரணமாக அவை இயங்கத் தொடங்கும் வரை கொழும்பிலுள்ள தலைமையகத்துக்கு முறைப்பாடு செய்யலாம் என்றும் ஜயவத் மேலும் தெரிவித்தார்.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள இந்த ஆணைக்குழு யாழ்ப்பாணத்தில் முதலில் அலுவலகமொன்றைத் திறப்பதற்கென முன்னுரிமை கொடுத்து செயற்படுகிறது எனவும் அவர் கூறினார்.

பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டிருந்த மனித உரிமைகள் செயலணிக்குழு கடந்த மாதம் கலைக்கப்பட்டதும்—

அதன் பணிகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டதும் தெரிந்தவையே. (இ-4)

# உடுப்பிட்டியில் புதிய மீன் சந்தை

பருத்தித்துறை, ஜூலை 28

உடுப்பிட்டியில் புதிய மீன் சந்தை அமைப்பதற்கான அடிக்கல் நடும் விழா அண்மையில் நடைபெற்றது.

இச்சந்தை அமைப்பதற்கான நிதி உதவியை அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் வழங்கவுள்ளது.

இவ்விழா வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் செயலாளர் அ. மகேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இதற்கான அடிக்கல்லை கரவெட்டி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் நட்டார்.

இந்நிகழ்வில் பிராந்திய பதில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர், திணைக்களப் பொறியியலாளர், திட்டமிடல் உதவிப் பணிப்பாளர், பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-118)

# விவசாயபீடம் இங்கே இயங்க பேரவையும், மூதவையும் ஒப்புதல்

வன்னியில் இயங்கி வந்த யாழ். பல்கலைக்கழக விவசாயபீடத்தை, நிலைமைகள் சீரடையும் வரை, யாழ்ப்பாணத்தில் இயங்கச் செய்வதற்கு யாழ். பல்கலைக்கழக மூதவையும், பேரவையும் ஒப்புதல் அளித்துள்ளன.

இதனையடுத்து விவசாய பீடத்தை யாழ் பல்கலைக்கழக வளாகத்தில் இயங்கச் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

# உள்ளூர்த் துணியிலேயே இனி மாணவருக்குச் சீருடை

கொழும்பு, ஜூலை 28

அடுத்த ஆண்டு பாடசாலை மாணவர்களுக்கு சீருடைத் துணிகளை வழங்குவதற்கு உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட துணிகளைக் கொள்வனவு செய்ய கல்வி, உயர் கல்வி அமைச்சு திட்டமிட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலவச சீருடை வழங்குவதற்காக ஆண்டுதோறும் சுமார் 5 கோடியே 34 லட்சம் மீற்றர் துணி வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுவது வழக்கம்.

1992 ஆம் ஆண்டிலிருந்து 1997 ஆம் ஆண்டுவரை சீருடைத்துணிகளை இறக்குமதி செய்ததில் சுமார் 360 கோடி ரூபா செலவாகியுள்ளது எனத்தெரிவிக்கப்படுகிறது. (ஐ-10)

---

# பொதுக்கூட்ட அறிவித்தல்

**அல்வாய் குமிழடி அதிசய விநாயகர் ஆலய வருடாந்தப் பொதுக்கூட்டம்**

காலம்: **03 — 08 — 1997**

ஞாயிற்றுக்கிழமை மு. ப. 10.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

அத்தருணம் அங்கத்தவர்கள், அன்பர்கள், அடியார்கள், நலன்விரும்பிகள் யாவரும் பங்குகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

- பரிபாலன சபையினர்

(சி/1175)

---

# பாலர் பாடசாலை விளையாட்டுப்போட்டி

மந்துவில் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவின் கீழ் இயங்கும் பாலர் பாடசாலையின் நான்காம் ஆண்டு விளையாட்டுப் போட்டி (28 - 07 - 1997) இன்று திங்கட்கிழமை பி. ப. 12-00 மணிக்கு நடைபெறும். இவ் விளையாட்டுப்போட்டியில் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கொடிகாமம் ப. தெ. வ. அ. கூ. சங்கம்.
பாலர் பாடசாலை பெற்றோர் ஆசிரியசங்கம்,
இளைஞர்கள், யுவதிகள், நலன் விரும்பிகள்.

(சி-1203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஊசலாடும் மருத்துவ பீடம்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. நோயாளரின் உயிர்காக்கும் வைத்தியர்களை — டாக்டர்களை — உருவாக்கும் அந்த உயர் கல்விப்பீடத்திற்கு இப்படி ஓர் ஆபத்துச் சூழ்ந்திருப்பது மிகவும் துரதிர்ஷ்டவசமானது.

யாழ்.பல்கலைக்கழகமருத்துவ பீடம் வடபகுதி வாழ் மக்களின் — தமிழர்களின் — ஓர் அரும் பெரும் தேசியச் சொத்து. கடந்த சுமார் பதினைந்து வருடங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட டாக்டர்களை அது பயிற்றுவித்து எமது சமூகத்துக்குப் பெரும்சேவை புரிந்துள்ளது.

போதியளவு வைத்திய நிபுணர்களும், வைத்தியப் போதனாசிரியர்களும் யாழ். மருத்துவ பீடத்திலும், யாழ். போதனா வைத்தியசாலையிலும் பணிபுரிவதற்கு முன்வராததாலேயே—

மருத்துவ பீடத்தை மூடவேண்டிய இப்போது பயிலும் வைத்திய மாணவர்களை வேறு மருத்துவ பீடங்களுக்கு மாற்ற வேண்டிய நிலையும், புதிய மாணவர்களைச் சேர்க்க முடியாத நிலையும்—பெரும் நெருக்கடியான, ஆபத்தான கட்டம் தோன்றியுள்ளது

யாழ். மருத்துவ பீடத்தில் இப்போது 536 வைத்திய மாணவர்கள் பயில்கின்றனர். மொத்தம் 68 போதனாசிரியர்கள் இருக்க வேண்டிய இடத்தில் 26 பேர் மட்டுமே உள்ளனர். போதனா வைத்தியசாலையில் செய்முறைப் பயிற்சி வகுப்புகளை நடத்துவதற்கு குழந்தை வைத்தியம், பெண நோயியல் உட்பட்ட பலதுறைகளுக்கு ஒரு வைத்திய நிபுணர் தானும் இல்லாத நிலை.

போதனாசிரியர்களாகப் பணிபுரியவருவோருக்கு வழமையை விடக் கவர்ச்சிகரமான நிதி ஊக்குவிப்புகள், ஏனைய வசதிகளை வழங்க முன்வந்த போதிலும், வைத்திய நிபுணர்கள், வைத்தியப் பேராசிரியர்கள் யாழ்ப்பாணம் வந்து பணிபுரிய பின்னிற்கிறார்கள்.

இந்தப் பாதகமான நிலையை நீக்குவது எப்படி? மருத்துவ பீடம் மூடப்படாமல் தடுக்கும் பெரும் பொறுப்பு பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு மட்டுந்தானா? சமூகம் விழித்துக்கொண்டு இந்த நெருக்கடியில் இருந்து மீள்வதற்குத் தானும் உழைக்கக் கூடாதா? முயற்சிக்கக் கூடாதா? அழுத பிள்ளை தான் பால் குடிக்கும்.

இந்த மருத்துவ பீடம் மூடப்பட்டால் பாதிக்கப்பட இருப்பவர்கள் எமது பிள்ளைகள் அல்லவா? காலிக்கும் கண்டிக்கும் என்று அலைந்து திரிந்து தான் அவர்கள் பயில நேரிடும்!

வைத்திய நிபுணர்கள், பேராசிரியர்கள், போதனாசிரியர்கள் யாழ்ப்பாணம் வருவதற்கு இங்குள்ள வழமைக்கு மாறான வாழ்க்கைச் சூழலும் முக்கிய காரணம் என்பதனை அரசுக்கு எடுத்துக் கூறவும்—

இந்தியா போன்ற வெளிநாடுகளில் இருந்து அவர்களை வரவழைக்குமாறு அரசிடம் எடுத்துச் சொல்லவும் — அக்கறையுள்ளவர்கள் சமூக மட்டத்தில் அணி திரள வேண்டும். அப்போது தான் எமது ஓர் அருமந்த சொத்தைக் காப்பாற்றி, உயிர் பிழைக்க உதவ முடியும்.

# உத்தேச கல்விச் சீர்திருத்தம் குறித்து நாடாளுமன்றில் விசேட அறிக்கை

## கல்வி அமைச்சர் சமர்ப்பித்தார்

கொழும்பு, ஜூலை 28

1999 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரவுள்ள உத்தேச கல்விச் சீர்திருத்தம் பற்றி கல்வி, உயர் கல்வி அமைச்சர் ரிச்சேர்ட் பத்திரான கடந்தவெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் விசேட அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தார்:

ஜி. சீ. ஈ. சாதாரண தரம், ஜி சீ. ஈ. உயர் தரம் மற்றும் தொழில்நுட்பக் கல்வி, வாழ்க்கை முறைக்கல்வி சம்பந்தமான விவரங்கள் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளன:

**ஜி சீ. ஈ. சாதாரண தரம்**

1999 ஆம் ஆண்டு நடைபெறும் ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான பாடத் திட்டத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இப் பரீட்சைக்கு மாணவர்கள் 7 பாடங்களுக்குத் தோற்ற வேண்டும்.

சமயம், தாய்மொழி, கணிதம், விஞ்ஞானம், சமூகக் கல்வி, அழகியற்கல்வி, ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு மாணவர்கள் தோற்றுவர். இதற்கு மேலதிகமாக மாணவர்கள் விரும்பின் பழைய பாடத்திட்டத்துக்கமைந்த பாடங்களுக்கும் தோற்றலாம்.

கணிதம் I, கணிதம் II என இரண்டு பகுதிகளாகக் கணித பாடப் பரீட்சையும் —

அதே போல விஞ்ஞானம் I, விஞ்ஞானம் II என இரண்டு பகுதிகளாக விஞ்ஞானபாடப் பரீட்சையும் —நடத்தப்படும்.

ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் கணிதத்துறையைத் தெரிவுசெய்யும் மாணவர்கள் கணிதம் II பாடத்தில் சித்தியடைய வேண்டும். ஆயினும் கணிதம் I இல் சித்தியடைந்தால் ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சித்தி அடைந்ததாகக் கருதப்படும்.

இதேபோல் ஜி. சீ. ஈ உயர் தரத்தில் விஞ்ஞானத்துறையைத் தெரிவு செய்யும் மாணவர்கள் விஞ்ஞானம் II இல் சித்தி அடைய வேண்டும். எனினும் விஞ்ஞானம் I இல் சித்தி அடைந்தால் ஜி. சீ. ஈ. சாதாரண தரத்தில் சித்தி அடைந்ததாகக் கருதப்படும்.

எனினும் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களின் மொத்தமுள்ள 4 பிரிவுகளிலும் தோற்ற விரும்பும் மாணவர்கள் அவ்வாறு தோற்றுவதற்கு தடை எதுவுமில்லை.

**ஜி. சீ. ஈ. உயர்தரம்**

ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு உதவும் வகையில் இப்போதுள்ள பாடங்களுடன் தொழில் நுட்பத்துறை என புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளது. தொழில்நுட்பம், கைத்தொழிற்பயிற்சியைப் பெற்று சுய வேலைவாய்ப்புத் தேடும் மாணவர்களுக்கு இந்தத் திட்டம் உதவும்.

பழைய பாடத்திட்டப்படி ஜி சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் 2000 ஆம் ஆண்டு வரை பரீட்சைக்குத் தோற்றலாம். எனினும் ஜி சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்கு மூன்று தடவைகளுக்கு மேல் எடுக்கமுடியாது என்ற கட்டுப்பாடு தொடர்ந்து இருக்கும்.

1999 ஆம் ஆண்டு முதல் பல்கலைக்கழக அனுமதி பெறுவதற்கான ஆகக் குறைந்த புள்ளி 140 ஆக இருக்கும்; பல்கலைக்கழகத் தெரிவுக்கான இப்போதுள்ள மாவட்ட கோட்ட முறையில் மாற்றம் இருக்காது.

1999 ஆம் ஆண்டு முதல் ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் 3 மணித்தியாலம் கொண்ட பொது உளச்சார்புப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். இதற்கான புள்ளிகள் மாவட்ட அடிப்படையிலேயே வழங்கப்படும்.

**5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில்**

ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் மாற்றம் எதுவும் இல்லை. (இ-5)

## கல்லடி பாலத்தில் குண்டு

மட்டக்களப்பு மாவட்டம் கல்லடிப் பாலத்துக்கு அருகில் சைக்கிள் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த குண்டு ஒன்றை படையினர் கண்டுபிடித்தனர்.

இந்தக் குண்டு பின்னர் செயலிழக்கச் செய்யப்பட்டது. (இ-3)

## தட்டுப்பாடு

தென்மராட்சிப் பிரதேசத்தில் மண்வெட்டிப் பிடிக்கான தடிகள் இல்லாததால் விவசாயிகள் பெரிதும் கஷ்டமடைகின்றனர்;

பிடி போடுவதற்கான தடிகள் ஏனைய பகுதிகளிலிருந்து கொண்டு வரப்படாததால் இங்குள்ள மரங்கள் தறிக்கப்பட்டு வருகின்றன. (இ-17)

# குடாநாட்டுப் படையினருக்கான பொருள்கள் கொழும்பில் தேக்கம்

## இராணுவ விமான சேவை குறைப்பு

கொழும்புக்கும் பலாலிக்கும் இடையேயான இராணுவ விமானச் சேவை குறைந்துள்ளதால் குடாநாட்டில் உள்ள படையினருக்கு அனுப்ப வேண்டிய பொருள்கள் கொழும்பில் தேங்கிக் கிடப்பதாக கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வியாழக்கிழமை படையினருக்காக ஒருசேவை மட்டுமே நடந்தது என்றும்—

குறைந்தளவு சேவையே இடம்பெறுவதாகவும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதன் காரணமாக யாழ். மாவட்டத்தில் பணியாற்றும் படையினருக்கு தேவையான பல பொருள்கள் அனுப்ப முடியாத நிலையில் கொழும்பில் தேங்கியுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-3-150)

# காணாமற்போனோர் தொடர்பாக நாடாளுமன்றில் வினா எழுப்பப்படும்

## பலன் இல்லையேல் வெகுஜனப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

நாடாளுமன்றத்தில் அவசரகால நீடிப்புப் பிரேரணை விவாதத்தின் போது குடாநாட்டில் பல்வேறு சமயங்களில் கைது செய்யப்பட்டு காணாமல் போனவர்கள் தொடர்பாக யாழ்.மாவட்ட எம். பிக்கள் கேள்வி எழுப்புவர்.

நேற்று நடந்த காணாமல் போனோர், கைதானோர் பாதுகாவலர் சங்கக் கூட்டத்தில் இது குறித்து முடிவுசெய்யப்பட்டது.

நேற்றுக்காலை வேம்படி மகளிர் கல்லூரியில் நடந்த இக் கூட்டத்தில் ஈ. பி. டி. பி, புளொட், ஈ பி. ஆர். எல்.எவ். ஆகியவற்றின் பிரமுகர்களும் வெகுஜன அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

காணாமல் போனவர்கள் தொடர்பாக பெரிய அளவில் வெகுஜனப் போராட்டம் நடத்துவது தொடர்பாகக் கூட்டத்தில் ஆராயப்பட்டது,

காணாமல் போனவர்கள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் குரல் எழுப்புவது என்றும் —

அந்த முயற்சியும் பலனளிக்காது விட்டால் வெகுஜனப் போராட்டம் நடத்துவது என்றும் — முடிவு செய்யப்பட்டது; (இ-3-5)

# காவலரணுக்கு அருகில் தென்னை வீழ்ந்து படை அதிகாரி பலி!

## கொடிகாமம் பகுதியில் சம்பவம்

காற்றினால் வேருடன் சாய்ந்த தென்னை மரம் காவலரண் அருகில் வீழ்ந்ததில் கனிஷ்ட படை அதிகாரி ஒருவர் பலியானார். மற்றொரு கனிஷ்ட படை அதிகாரி மயிரிழையில் தப்பினார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு கொடிகாமம் எருவன் படைமுகாமில் நிகழ்ந்தது.

ஹிங்குராங் கொடையைச் சேர்ந்த லான்ஸ் கோப்ரல் ஈ. எம். ஜி. விக்கிரசிங்க என்பவரே மரணமானவராவார்.

சாவகச்சேரி திடீர் மரணவிசாரணை அதிகாரி நா. தர்மேந்திரர் சாவகச்சேரி பொலீஸாருடன் சம்பவம் நிகழ்ந்த இடத்துக்குச் சென்று விசாரணை நடத்தினார்.

சடலத்தை கொழும்பு பெரியாஸ்பத்திரி சட்ட வைத்திய அதிகாரி பிரேத பரிசோதனை செய்யவேண்டும் என்று உத்தரவிட்டு பரிசோதனை அறிக்கை கிடைக்கும் வரைதீர்ப்பு வழங்குவதை மரணவிசாரணை அதிகாரி ஒத்திவைத்தார்;

சாவகச்சேரி பொலீஸ் நிலைய கான்ஸ்டபிள் ஹேரத் சாட்சிகளை நெறிப்படுத்தினார்.

இறந்தவருக்கு அருகில் இருந்த லான்ஸ் கோப்ரல் எம். ஐ. குணரத்ன, சார்ஜன்ட் மேஜர் ஈ. எல். பீ. தெல்கிட்ட ஆகியோர் சாட்சியமளித்தனர். (இ-117)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ். திருவண்ணை நகர் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தான தேவி மஹோற்சவம் இன்று காலை 11. 30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 5 ஆம் திகதி இரதோற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம் பெறும். (இ-3)

# விமானிகளுக்குப் பயிற்சி அளிக்க பயிற்சியாளர்கள் இல்லை

## வை- 8 ரக விமானம் தரித்து நிற்பு

கொழும்பு, ஜூலை 28

விமானிகளுக்குப் பயிற்சி வழங்க பயிற்சியாளர்கள் இல்லாத காரணத்தால் விமானப்படையின் வை — 8 ரக விமானம் ஒன்று இரத்மலானை தளத்தில் நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த விமானம் பழுதடைந்து சீனாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் —

திருத்தப்பட்டு தற்போது மீண்டும் இலங்கைக்கு எடுத்து வரப்பட்டு இரத்மலானை தளத்தில் நிறுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விமானிகளுக்குப் பயிற்சி அளிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த உக்ரைன் நாட்டுப் பயிற்சியாளர்கள் தமது ஒப்பந்த காலம் முடிந்து நாடு திரும்பி உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-3-150)

# சிங்கள ஆணைக் குழு முன் முஸ்லிம் லீக் சாட்சியமளிக்கும்

சிங்கள ஆணைக்குழு முன்பாக முஸ்லிம் லீக் எதிர்வரும் 7 ஆம் திகதி சாட்சியமளிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் மக்கள் தொடர்பாக தவறான தகவல்கள் சிங்கள ஆணைக்குழு முன்பாக தெரிவிக்கப்படுவதாகவும்—

அது தொடர்பான விளக்கங்களை அளிக்க தமக்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்றும்—முஸ்லிம் லீக் சிங்கள ஆணைக்குழுவிடம் கேட்டிருந்தது.

இதைத் தொடர்ந்து முஸ்லிம் லீக் சாட்சியம் அளிக்க எதிர்வரும் 7 ஆம் திகதி சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது. (இ-3-150)

## நாளை

**ஆடி 13**

செவ்வாய்க்கிழமை

திதி: தசமி

பிற்பகல் 1.16 வரை.

நட்சத்திரம்: கார்த்திகை

காலை 9.28 வரை.

சுபநேரம்: 10.33-12.03

ராகுகாலம்: 3.03-4 33

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐக்கிய முன்னணி அரசில் தி. மு. க. தொடர்ந்து நீடிக்கும்

### கருணாநிதி நேற்று அறிவிப்பு

சென்னை, ஜூலை 28

ஐக்கிய முன்னணி அரசில் தி.மு.க. தொடர்ந்தும் நீடிக்கும் என்று தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி தெரிவித்தார்.

ஐக்கிய முன்னணியில் ஒற்றுமை நீடிக்கவேண்டும் என்பதற்காக அங்கம் வகிக்கும் கட்சிகள் தனித்தனியாகக் கருத்துக்கள் வெளியிடக் கூடாது என்று முடிவு எடுக்கப் பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

தி.மு. கழகத்துக்கு டில்லியில் முக்கியத்துவம் இருப்பதற்குக் காரணம் அகில இந்திய கட்சிகள் பலவீனம் அடைந்திருப்பதுதான். அப்படிப் பலவீனம் அடைவதை வரவேற்கிறேன் என்றும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய முன்னணி அரசில் இருந்து வெளியேறப் போவதாகச் சமீபத்தில் கருணாநிதி அறிவித்தது இந்திய அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது தெரிந்ததே.

இதற்கிடையில் தி.மு.க. தலைவராக மு. கருணாநிதி மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

நேற்றுச் சென்னையில் நடந்த கட்சியின் பொதுக் கூட்டத்தில் அவர் ஏழாவது முறையாகத் தெரிவுசெய்யப் பட்டார். [(இ-3)

## வன்னிக்கு வினாத்தாள்

கொழும்பு, ஜூலை 28

எதிர்வரும் 4 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சையின் வினாத்தாள்களை இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு எடுத்து செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா கல்வித் திணைக்களம் இந்த வினாத்தாள்களை எதிர்வரும் 31 ஆம் திகதி எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சர்வதேச தொண்டர் அமைப்பு ஒன்றின் உதவியுடன் இவை அங்கு எடுத்துச் செல்லப்படவிருக்கின்றன. (இ-3-150)

## வெற்றிலை திருடியதாக வழக்கு

யாழ்ப்பாணம், ஜூலை, 28

வெற்றிலை திருடியதாக ஒருவர் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

இளவாலைப் பகுதியில், வெற்றிலைத் தோட்டமொன்றில் 63 ரூபா பெறுமதியான 9 வெற்றிலைகளைத் திருடியதாக இவர் மீதுகுற்றஞ்சாட்டப்பட்டது.

இளவாலைப் பொலீஸாரால் யாழ். நீதிமன்றத்தில் சந்தேக நபர் ஆஜர் செய்யப் பட்டார்.

சந்தேக நபரை ஒருநாள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் ஏ. என். இராமச்சந்திரன் மீண்டும் இவ்வழக்கை மறுநாள் விசாரணைக்கு எடுத்தார்.

விசாரணையின் போது எதிரி குற்றவாளியாகக் காணப்பட்டார்.

அடுத்த மாதம் 11 ஆம் திகதி தவணைக்கு வருமாறு உத்தரவிடப்பட்டு சரீரப் பிணையில் செல்ல நீதிவான் அவரை அனுமதித்தார். (இ-15)

## விவசாயிகளுக்கு உதவி

சண்டிலிப்பாய், ஜூலை 28

வலி தென் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உலக உணவுத் திட்டத்தின் கீழ் 150 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு விவசாயத்துக்கான உதவிப்பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

ஐந்து பேரைக் கொண்ட குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குழுவுக்கும் நீர் இறைக்கும் இயந்திரம், பசளை, மரக்கறி விதைகள், கிருமிநாசனி என்பன போன்றவை விநியோகிக்கப்படவுள்ளன.

யுத்தகால அனர்த்தங்களினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளான இளவாலை, மாதகல் ஆகிய இடங்களிலுள்ள விவசாயிகளுக்கு இதில் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (இ-135)

# தேர்தல் சீர்திருத்தம் குறித்து

# பீரிஸ் - தமிழ்கட்சிகள் சந்திப்பு

கொழும்பு, ஜூலை 28

அரசு முன்வைத்துள்ள புதிய தேர்தல் சீர்திருத்தம் மூலம் தமிழ் மக்கள் கொண்டுள்ள அச்சம் குறித்து தமிழ்க் கட்சிகள் நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி எல், பீரிஸுடன் எதிர்வரும் வியாழக்கிழமை பேச்சு நடத்தவிருக்கின்றன.

தொகுதி ரீதியாக உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் முறையால் தமிழ் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைய வாய்ப்பு உண்டு எனத் தமிழ் கட்சிகள் அச்சம் வெளியிட்டுள்ளன.

இந்த விவகாரம் குறித்து நீதி, அரசமைப்பு விவகார அமைச்சு அதிகாரிகளுடன் தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகள் இன்று பேச்சு நடத்தவிருக்கின்றனர். (இ-3-164)

## குண்டு வெடிப்பு

கொழும்பு, ஜூலை 28

மட்டக்களப்பு வலையிறவுப் பாலத்தில் குறித்த நேரத்தில் வெடிக்கும் குண்டு ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை காலை 7-30 மணி அளவில் வெடித்ததில் வவுணதீவு பிரதான வீதி பலத்த சேதமடைந்தது. (இ-3)

## 15 இலங்கையரையும் ஆஸி நாடு கடத்தியது

கொழும்பு, ஜூலை 28

ஆஸ்திரேலியாவுக்குள் சட்டவிரோதமாக பிரவேசிக்க எத்தனித்த 15 இலங்கை இளைஞர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

இரு ஆஸ்திரேலிய அதிகாரிகள் சகிதம் அவர்கள் நேற்று முன்தினம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

விமானநிலைய அதிகாரிகளிடம் அவர்கள் ஆஸ்திரேலிய அதிகாரிகளால் ஒப்படைக்கப்பட்டனர்.

பின்னர் அவர்கள் நீர்கொழும்பு பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்த இளைஞர்களில் பெரும்பாலானவர்கள் வென்னப்புவ, மாரவில ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் எனப் பொலீஸார் தெரிவித்தனர். (இ-3)

# உயிலங்குளம் வந்த 4,000 பேரை படையினர் திருப்பி அனுப்பினர்!

கொழும்பு, ஜூலை 28

மன்னார் மார்க்கமாக யாழ்ப்பாணம் செல்வதற்கு வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து உயிலங்குளம் வந்த சுமார் 4 ஆயிரம் பேர் படையினரால் திருப்பி அனுப்பப் பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ். செல்வதற்காக மன்னாரில் ஏற்கனவே மூவாயிரம் பேர் தங்கி இருப்பதே இதற்குக் காரணம்.

அதே சமயம் வன்னியில் இருந்து மன்னார் நகருக்குச் செல்ல புதிய பாதை ஒன்றைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்சமயம் வன்னியில் இருந்து மன்னார் நகருக்குச் செல்வதற்காக உள்ள உயிலங்குளம் பாதையை மழை காலத்தில் பயன்படுத்த முடியாது இருப்பதால் புதிய பாதை ஒன்றைத் திறக்க ஆலோசிக்கப்படுகிறது.

பறையனாலங்குளம் ஊடாகவே புதிய பாதை திறக்கப்படவுள்ளது என்று கூறப்படுகிறது. (இ-3-164)

## காங்கிரஸ்...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்த மாநாட்டில் பங்குபற்றும் தலைவர்களிடம் ஈழத் தமிழர் பிரச்சினைகளை எடுத்துக் கூறவிருப்பதாக ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ்தேவானந்தா உதயனுக்குத் தெரிவித்தார். (இ-3)

## காணாமற்போன...

(முதலாம் பக்கத் தொடர்)

ளதாகவும் —

அந்த முயற்சிகள் அவ்வவு பயனைத் தரவில்லை என்றும் — மற்றொரு செய்தி தெரிவித்தது. (இ-3-150)

## வன்னி...

(முதலாம் பக்கத் தொடர்)

வத்தினர் முன்னேறும் ஒவ்வொரு தடவையும் போதிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட பகுதிகளுக்கு விடுதலைப் புலிகள் வந்து சேர்வதைத் தடுப்பதே இதன் நோக்கமாகும்.

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையின் நோக்கம், வடபகுதி நோக்கி முன்னேறி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இன்னமும் இருந்து வரும் சில பகுதிகளை மீண்டும் கைப்பற்றுவதாகும்.

யாழ்ப்பாண குடாநாடு, மன்னார், கிளிநொச்சி, வவுனியா ஆகிய இடங்களில் அரசாங்க நிர்வாகம் வெற்றிகரமாக இடம்பெற்று வருகிறது.

வடபகுதியின் 30 சதவீதமான பிரதேசமே விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இன்னமும் உள்ளது.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3)

## பயிற்சி பெற்று வெளியேறிய படையினரின் அணிவகுப்பு

### நேற்று மானிப்பாயில நடந்தது

கஜபாகு அணியின் 3ஆவது படைப்பிரிவின் பயிற்சி பெற்று புதிதாக வெளியேறியவர்களின் அணிவகுப்பு நேற்றுக் காலை மானிப்பாய் இராணுவ முகாமில் இடம் பெற்றது.

அங்கு இடம்பெற்ற அணிவகுப்பு மரியாதையை 51 ஆவது படைப் பிரிவின் கட்டளையதிகாரி மேஜர் ஜெனரல் பலேகல்ல ஏற்று அங்கு உரையாற்றினார்.

கஜபா அணியின் பணிகளையும், படையினரின் செயற்பாடுகளையும் அவர் அங்கு எடுத்து விளக்கினார்.

புதிதாகப் பயிற்சி பெற்று வெளியேறியோர் பலதரப்பட்ட சாகசவிளையாட்டுக்களையும் செய்து காண்பித்தனர்.

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் இந்த நிகழ்வு இடம் பெற்றது. (இ-3-5)

## விலை குறைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 28

லக்ஸ்பிறேயின் விலை 2 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினரே இவ்விலைக் குறைப்பைச்செய்துள்ளனர்.

இதற்கமைய யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் 83 ரூபா விற்ற லக்ஸ்பிறேயை 81 ரூபாவாகவிற்று வருகிறது. (இ-15)

## கொடுப்பனவு

தென்மராட்சி பிரதேச மாதாந்த உதவிப் பணம் பெறுவோர் காசநோய், புற்றுநோய், தொழுநோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்கான ஜூலை மாத கொடுப்பனவு அந்தந்தப்பகுதி அஞ்சல் அலுவலகங்களுக்கு பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவினரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (இ-117)

## பால் மாவின் உற்பத்தி திகதி

பால்மா வகைகளில் உற்பத்தித் திகதி, முடிவு திகதி ஆகியவற்றை தெளிவாக அழிக்க முடியாத வகையில் அச்சிட வேண்டும் என்றும்—

அவ்வாறு செய்யாமல் விற்பனையாகும் பால்மா வகை தடை செய்யப்படும் என்றும் — அரசு அறிவித்துள்ளது.

## காணாமற் போனவர் எலும்புக்கூடாக மீட்பு!

### வவுணதீவுமுகாம்தாக்குதலை அடுத்து

கொழும்பு, ஜூலை 28

வவுணதீவு பிரதேச செயலகத்தில் இருந்து 300 யார் தொலைவில் உருக்குலைந்த நிலையில் எலும்புக்கூடு ஒன்று கடந்த வியாழனன்று மீட்கப்பட்டுள்ளது.

இந்த எலும்புக்கூடு கடந்த 4 மாதங்களுக்கு முன்னர் வவுணதீவு படைமுகாம் தாக்குதலை அடுத்து காணாமற் போன மூன்று பொதுமக்களில் ஒருவருடையது என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

எலும்புக்கூட்டுக்கு அருகே காணப்பட்ட காற்சட்டை காணாமற்போன தனது மகனுடையது என்று வவுணதீவைச் சேர்ந்த ஒருவர் அடையாளம் காட்டியுள்ளார். (ஐ)

## மஹ்ரூப்பின் இடத்துக்கு அவரது மகளை நியமிக்கக் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 28

படுகொலை செய்யப்பட்ட திருகோணமலை மாவட்ட ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் மஹ்ரூப்பின் இடத்துக்கு அவரது மகளான கலீனாவை நியமிக்குமாறு ஐ.தே.க. தலைமைப் பீடத்துக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது அந்த மாவட்டத்தில் உள்ள மற்றொரு ஐ.தே.க. எம். பியான சுனில் சாந்தவும் இந்தக் கோரிக்கைக்கு ஆதரவு வழங்கி வருகிறார்.

இவரை நியமிப்பதாயிருந்தால் திருகோணமலை மாவட்ட ஐ தே. க. பட்டியலில் உள்ள சகலரும் ராஜினாமாச் செய்ய வேண்டிய நிலை ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை — மஹ்ரூப்பின் மூத்த சகோதரனும், முன்னாள் எம். பியுமான முகமது அலியை நியமிக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-3-150)

## 'குட்வில்'...

(முதலாம் பக்கத் தொடர்)

அனுப்பி வைத்தார்.

இதனை அடுத்து இந்தக் கப்பல் கொழும்புக்கு திரும்பவும் வரவழைக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை பிற்பகலே கொழும்பில் இருந்து இக்கப்பல் திருகோணமலை வந்து சேர்ந்தது.

இந்தக் கப்பல் தகுதி அற்றது என அறிவிக்கப்பட்டதை அடுத்து வடபகுதிக்கான பயணிகள் கப்பல் சேவை மீண்டும் கேள்விக்குறியாகிவிட்டது.

பேசாலையிலும் வெற்றிலைக்கேணிக் கடலிலும் வைத்து ஒரு பயணிகள் கப்பலும் ஒரு சரக்குக் கப்பலும் விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டதை அடுத்து கப்பல் சேவைகள் வெகுவாகப் பாதிப்படைந்திருப்பது தெரிந்ததே.

ஒரு சில சரக்குக் கப்பல்கள் மட்டும் காங்கேசன்துறை வந்துள்ளன. ஆனால் பயணிகள் கப்பல் சேவை இன்னும் இடம்பெறவில்லை.

வாடகைக்கு அமர்த்தப்பட்ட 'குட்வில் வைட்' கப்பலும் தகுதி அற்றது என அறிவிக்கப்பட்டிருப்பதால் இனிமேல் மற்றொரு கப்பலை ஏற்பாடு செய்தே பயணிகள் சேவையை ஆரம்பிக்க முடியும் என்று நம்பப்படுகிறது.

வெளிநாட்டுக் கப்பலான 'குட்வில் வைட்' 1967 ஆம் ஆண்டு கட்டப்பட்டது என்றும் —

சரக்குக் கப்பலான அது பயணிகள் கப்பலாக மாற்றப்பட்டிருந்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-3-164-173)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 28-07-1997இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org